| | |
|---|---|
| | **பொள்ளாச்சி நகராட்சி**<br>**31.01.2020 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட தீர்மானம்** |
| 2060) | பொள்ளாச்சி நகராட்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தில் தினசரி 112.50 லட்சம் லிட்டர் கழிவு நீர் இரண்டாம் நிலை சுத்திகரிப்பு சுழற்சி முறையில் பெறப்படவுள்ளதை திருவாளர்கள்:கற்பக சோலை ஃபார்மர் புரெடியூசர் கம்பெனி லிமிடெட், பொள்ளாச்சி என்ற நிறுவனத்திற்கு அரசாணை எண்.(3D) No.23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.18.11.2019 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.57044/2017/UGSS-2, நாள்:09.01.2020–ன் படி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களின் 09.01.2020 தேதியிட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>இரண்டாம் நிலை சுத்திகரிப்பு சுழற்சி முறையில் பெறப்படும் 112.50 லட்சம் லிட்டர் கழிவுநீரை திருவாளர்கள்:கற்பக சோலை ஃபார்மர் புரெடியூசர் கம்பெனி லிமிடெட், பொள்ளாச்சி என்ற நிறுவனத்திற்கு விற்பனை செய்ய 18.02.2019 ஆம் தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டவாறு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் நடைமுறையில் உள்ள அரசாணை மற்றும் 09.01.2020 தேதியிட்ட கடிதத்தில் உள்ள இதர நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்பத்திரம் தயார் செய்து நகராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்டவாறு ஒப்பந்தம் செய்து கொண்ட பின் உரிய அனுமதி வழங்கலாம். இதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2061) | இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2018ல் பணி ஓய்வு பெற்ற திருமதி.எஸ்.குஞ்சம்மாள், க/பெ.சுப்புலான் என்பவர் நகராட்சிக்கு எதிராக பணிக்கொடை சம்மந்தமாக கோவை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் 628/19 என்ற வழக்க எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராக திரு.சகாதேவன்,BA.BL வழக்கறிஞர் அவர்களை நியமிக்கவும், அதற்கான செலவுகளை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.0153/2019/பி4** |
| 2062) | பொள்ளாச்சி நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் நான்கு தளங்கள் கொண்ட கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது. பல்வேறு பணிகளுக்காக வரும் பொதுமக்கள், மற்றும் நகராட்சி அலுவலர் ஆகியோர் நான்கு தளங்களுக்கு சென்று வருவதற்கு ஏதுவாக மின்தூக்கி (Lift) அமைக்கப்பட்டு உள்ளது. மின்தூக்கியை தயாரிப்பாளரே கடந்த ஓராண்டாக பராமரிப்பு பணியை மேற்கொண்டு வருகின்றனர். தற்பொழுது வரும் ஜனவரி 2020 மாதத்துடன் முடிவடைகிறது. தற்போது பிப்ரவரி 2020 பராமரிப்பு பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தயாரிப்பாளரான M/s.Johnson Lifts P.ltd, Coimbatore நிறுவனத்தார் ஓராண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.0151/2020/இ1** |
| 2063) | பொள்ளாச்சி நகராட்சி கல்வி நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான A.B.T. ரோடு நகர்மன்றப்பள்ளியில் மராமத்து பணிகள் செய்தல் பணிக்கு ரூ.6.50 **இலட்சம்** மதிப்பீட்டிற்கு 09.01.2020 ஆம் தேதியில் முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு. |

| | |
|---|---|
| 1. | திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.23%** குறைவு. |
| 2. | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **2.86%** அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.23%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.23%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 6874/2019/இ1**

**2064)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் "அண்ணா பேருந்து நிலையம்" LED –ல் பெயர் பலகை அமைத்தல்.பணிக்கு **ரூ.1.50 இலட்சம்** மதிப்பீட்டிற்கு **14.01.2020** ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.35%** குறைவு. |
| 2. | திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **3.17%** அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.35%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.35%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. 0055/2020/இ1

**2065)** திருப்பூர் மண்டலம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பொள்ள
ாச்சி நகராட்சியானது பாரம்பரியம் மிக்க சிறப்பு நிலை நகராட்சி ஆகும். இது 1920ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. 1983 ஆம் ஆண்டு முதல் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. மக்கள் தொகை 2011ன்

கணக்கின் படி 90180 ஆகும்.

தற்பொழுது பாதாள சாக்கடைப் பணி ரூ.170.22 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணி 30.06.2020ல் முழுமையாக முடிக்கப்படும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உறுதியளித்துள்ளது.

இவ்வாண்டு நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு நூறாவது ஆண்டாக உள்ளதாலும், நகர வளர்ச்சியின் காரணமாக பொது மக்களுக்கு அவசியம் தேவைப்படும் கீழ்க்கண்ட அடிப்படை மற்றும் கூடுதல் வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற துணை சபாநாயகர் மற்றும் பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நேரிலும், ஆய்வுக் கூட்டத்தின் வாயிலாகவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொது மக்கள் நலன் கருதியும் நகரத்தின் வளர்ச்சி கருதியும், நூறாவது ஆண்டு நடைபெறுவதையொட்டி, நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படும் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான நிதி உதவியினை அரசிடம் பெறவேண்டி உள்ளது. அரசின் நிநித உதவி பெற முதல் கட்டமாக விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்ய வேண்டியுள்ளது. விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்ய கலந்தாலோசகர் நியமனம் செய்ய வேண்டியுள்ளது. கலந்தாலோசகர் நியமனம் செய்ய தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிதி நிறுவனம் மூலம் செய்யவும், அதற்கான ஆய்வுக் கட்டணத்தினை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமப்பு சேசவ நிதி நிறுவனம் மூலம் பெறவும் ண்டியுள்ளது.

**<u>விரிவான திட்டங்கள்:</u>**

| வ. எண் | பணியின் பெயர் |
|---|---|
| 1. | பூங்கா அபிவிருத்தி (பூங்கா மேம்படுத்துதல் வேலி அமைத்தல், சுற்றுச்சுவர் மற்றும் விளையாட்டு சாதனங்கள்) |
| 2. | வணிக வளாகம் புதுப்பித்தல் (தேர்நிலை வணிக வளாகம், மலர் அங்காடி) |
| 3. | புதியதாக காய்கறி சந்தை அமைத்தல் |
| 4. | ஆம்னி பேருந்து நிலையம் |
| 5. | பள்ளிக் கட்டிடம் |
| 6. | சூரிய மின் சக்தி உற்பத்தி |
| 7. | சாலை ஓர பூங்கா மற்றும் நகரத்தின் அனைத்து சந்திப்புகளிலும் நீர் ஊற்று அமைத்தல். |
| 8. | தெப்பக்குளம் சீரமைத்து மேம்படுத்துதல் |
| 9. | நீச்சல் குளம் (கோட்டூர் ரோடு பள்ளி வளாகம் மற்றும் ஜோதி நகர்) |
| 10. | மழைநீர் வடிகால் |
| 11. | உள் மற்றும் வெளி விளையாட்டு அரங்கம் அமைத்தல் |
| 12. | பாலக்காடு சாலையில் வணிக வளாகம் கட்டுதல் |
| 13. | மரப்பேட்டை ஓடையில் ஆரம்பம் முதல் முடிவு வரை 5.5 கி.மீ நீளம் இருபுறமும் தடுப்புச்சுவர் மற்றும் ஓடையில் கான்கீரிட் தளம் அமைத்தல். |
| 14. | ரோலர் ஸ்கேட்டிங் மைதானம் மேம்படுத்துதல். |
| 15. | நூற்றாண்டு விழா நினைவு புதிய வணிக வளாகம் (மீன் அங்காடி, இறைச்சி அங்காடி, பாலக்காடு ரோடு, கோவை ரோடு) |
| 16. | நகர எல்லையில் நூற்றாண்டு நினைவு வளைவு அமைத்தல் |
| 17. | நகர் முழுவதும் கண்காணிப்பு கேமரா பொருத்துதல். |
| 18. | பல்லடுக்கு நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம். |
| 19. | நூலகக் கட்டிடம் அமைத்தல் |
| 20. | பேருந்து நிலையங்களில் அபிவிருத்தி பணிகள் செய்தல். |
| 21. | சுகார பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுதல் |

மேற்கண்ட திட்டங்களை அரசின் மானிய நிதி பெற்று செயல்படுத்தவும், அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், கலந்தாலோசகர் நியமனம் செய்யவும் அதற்கான நிதி உதவியை பெறவும், நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் நடவடிக்கை எடுக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

| | |
|---|---|
| | 1. மன்றம் அனுமதிக்கலாம். |
| 2066) | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் பிரிவில் தெருவிளக்கு பராமரிக்க பயன்படும் வாகன எண். TN41 E 0192 -த்திற்கு தகுதி சான்றிதழ் வட்டார போக்குவரத்து துறையில் பெற வேண்டியுள்ளது. இதற்கான பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வாகன பயன்பாட்டின் கருதி முன் அனுமதி பெற்ற மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 0071/2020/இ2** |
| 2067) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் கசிவு கண்டறிதல் வாகனத்தின் TN41T4572 தகுதி சான்று புதுப்பித்தல் பணி மற்றும் பராமரிப்பு பணிக்கு 14.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டுள்ளவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. திருவாளர்கள்: டி.வி.சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடேட், பொள்ளாச்சி. — ரூ.1,16,800/–<br>2. திருவாளர்கள்: பி.பி.ஷெரிப் ஆட்டோ டீசல், ஒர்க்ஸ், பொள்ளாச்சி. — ரூ.1,28,700/–<br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள திருவாளர்கள்:டி.வி.சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடேட், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. இப்பணிக்கு ஆகும் செலவினம் ரூ.1,20,000/– க்கு நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>2. வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்: டி.வி.சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடேட், பொள்ளாச்சி அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி, நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.6708/2019/இ2** |
| 2068) | நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்கான மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களை ( ) பீகார் மாநிலத்தில் இருந்து "Jay Pee Road ways, Madras" நிறுவனத்தின் மூலமாக கொண்டு வந்தமைக்கு போக்கவரத்து செலவுத் தொகை ரூ.18,09,780/– வரப்பெற்றுள்ளது என்றும், இதில் ரூ.68364/–ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்துமாறு கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.3469/2019/கொ–1, நாள்–21.01.2020ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி மேற்கண்ட தொகை ரூ.68,364/–ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகை ரூ.68,364/–ஐ "Jay Pee Road ways, Madras" நிறுவனத்திற்கு வழங்க மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.4619/2018/சி3** |
| 2069) | இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக திரு.ம.சக்கரையப்பன், த/பெ.மருதன் என்பவர் 28.02.2019ல் பணி ஓய்வு பெற்று நகராட்சிக்கு எதிராக பணிக்கொடை சம்மந்தமாக கோவை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் 771/19 என்ற வழக்கு எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராக திரு.சகாதேவன்,BA.BL வழக்கறிஞர் அவர்களை நியமிக்கவும், அதற்காக ஆகும் செலவுகளை மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.325/2020/பி4** |
| 2070) | இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின காரணமாக |

| | |
|---|---|
| | திருமதி.P.சரஸ்வதி,க/பெ.பழனிச்சாமி என்பவர் 30.06.2018ல் பணி ஒய்வு பெற்று நகராட்சிக்கு எதிராக பணிக்கொடை சம்மந்தமாக கோவை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் 772/19 என்ற வழக்கு எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராக திரு.சகாதேவன்,BA.BL வழக்கறிஞர் அவர்களை நியமிக்கவும், அதற்காக ஆகும் செலவுகளை மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.324/2020/பி4** |
| **2071)** | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் Indian Railway நிறுவனத்தின் அலைவரிசை இணைப்பு பெற தேவையான தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கி பொருத்தி கொடுத்தல் பணிக்கு ரூ.2.75 **இலட்சம்** மதிப்பீட்டிற்கு 14.01.2020 ஆம் தேதியில் முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.<br><br>**1.** M/s.Syscon Systems, Coimbatore. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.15%** குறைவு.<br>**2.** M/s.Sagar Electronics, Pollachi. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **2.91%** அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.15%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>**1.** மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>**2.** மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**3.** முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.15%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**4.** பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 6607/2019/இ1** |
| **2072)** | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகள் உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள UPS & Battery - களை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளுதல்..பணிக்கு ரூ.2.30 **இலட்சம்** மதிப்பீட்டிற்கு 14.01.2020 ஆம் தேதியில் முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.<br><br>**1.** M/s.Syscon Systems, Coimbatore. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.09%** குறைவு.<br>**2.** M/s.Sagar Electronics, Pollachi. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.59%** அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.09%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** |

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.09%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. **6606/2019/இ1**

**2073)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி மற்றும் சார்பு உபகரணங்களுக்கான ஆண்டு பராமரிப்பு (AMC) பணிக்கு ரூ.**7.80 இலட்சம்** மதிப்பீட்டிற்கு **14.01.2020** ஆம் தேதியில் முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| **1.** | M/s.Syscon Systems, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.06%** குறைவு. |
| **2.** | M/s.Sagar Electronics, Pollachi. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.68%** அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.06%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.06%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 6605/2019/இ1**

**2074)** பொள்ளாச்சி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2019–2020–ன் கீழ் சிப்பம் 1 முதல் 4 வரை ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. 14–வது மத்திய நிதி குழு திட்டம் ($14^{th}$ CFC) 2019–2020–ன் கீழ் 8 பணிகளில் தார்ச்சாலை அமைக்க வேண்டியுள்ளது.

மேற்காண் திட்டங்களில் நடைபெறும் பணிகளை ஆய்வு செய்து மதிப்பீட்டில் உள்ள விபரக் குறிப்பின்படி (Specification) அளவுகள் சரிபார்த்து அதற்குரிய சான்றுகள் வழங்க நடைபெற்று முடிந்துள்ள பணிகளையும் நடைபெறவுள்ள பணிகளையும் அவ்வப்பொழுது நேரில் சோதனை செய்து ஆய்வுகள் மேற்கொள்ள, வேண்டியுள்ளது. மேற்காண் பணிகளை மூன்றாம் நபர் பரிசோதனை அரசு பொறியியல் கல்லூரி மூலம் செய்ய வேண்டியுள்ளது. தர சோதனை மற்றும் ஆய்வுக் கட்டணங்களை அரசு பொறியியல் கல்லூரியிலிருந்து வழங்கப்படும் பட்டியல் படி கட்டணங்களாக அவ்வப்பொழுது செலுத்தப்பட வேண்டும். எனவே, மேற்காண் பணிகளுக்கு சோதனை மற்றும் ஆய்வு கட்டணங்களாக GST-வரியுடன் ஒரு பணிக்கு ரூ.35000 வீதம் 12 பணிகளுக்கு மொத்த கட்டண தொகை உத்தேசமாக ரூ.420000/–

| | |
|---|---|
| | ஆகும் என்பதால் இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காண் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2075) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான மரப்பேட்டை பள்ளி பின்புறம் NULM திட்டத்தில் கட்டப்பட்டுள்ள (வீடு இல்லாதோருக்கு தங்கும் விடுதி) கட்டிடத்திற்கு புதிய மும்முனை மின் இணைப்பு ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி பெயரில் பெறவும், இதற்காகும் கட்டணத் தொகைகளை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1968/2016/இ1** |
| 2076) | நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கோவை-வால்பாறை சாலைக்கு மேற்கு பகுதியில் உள்ள 18 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய உபயோகப்படுத்தப்படும் மதகுகளிலும் (வால்வு) ஏற்படும் குடிநீர் கசிவுகளையும் பொதுக்குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், மேலும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் முறையே பராமரிப்பு செய்வதற்கும் தேவையான உபகரணங்கள் விநியோம் செய்வதற்கும் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திட உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.10.00 இலட்சம் ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.0475/2020/இ1** |
| 2077) | பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்தில் மேற்கு பகுதியில் பாலக்காடு சாலைலிருந்து வடுகபாளையம் செல்லும் பிரதான பகிர்மான குழாயில் பகுதி பகுதியாக பிரித்து விநியோகம் செய்ய அமைக்கப்பட்ட இரு150mm CI வால்வுகள் முற்றிலும் பழுதடைந்து இயக்க இயலாமல் உள்ளது. இதனால் சீரான குடிநீர் விநியோகம் செய்வதில் தடை எற்படுகிறது. எனவே பழுதடைந்த வால்வுகளுக்கு பதில் புதிய 150mm DI வால்வுகள் பொருத்தி கொள்ளவும், இதற்கான மதிப்பீடு ரூ60,000./ க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.477/20/இ1** |
| 2078) | பொள்ளாச்சி நகராட்சியின் 33வது வார்டு பகுதியில் கோட்டூர் ரோடு பெரியார் காலனி கிழக்கு பகுதியில் கிணற்றுநீர் விநியோகத்தில் இரயில்வே பாலம் அருகில் பகிர்மான குழாய் பழுதடைந்தும், 5000லிட்டர் கொள்ளவு HDPE தொட்டி உடைந்தும் உள்ளது. இதனால் சீரான கிணற்றுநீர் விநியோகம் பாதிப்படைகிறது. எனவே பழுதடைந்ததிற்கு பதில் புதிய பகிர்மான குழாய் மற்றும் 5000லிட்டர் கொள்ளவு HDPE தொட்டி அமைத்துக் கொள்ளவும், இதற்கான மதிப்பீடு ரூ1.25 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. கிணற்றுநீர் பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொள்ளும் |

நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.0476/20/இ1**

**2079)** நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களில் கீழ்க்காணும் குத்தகை இனங்களின் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவடைகிறது.

| **வ.எண்** | **குத்தகை இனம்** | **குத்தகை முடிவுறும் காலம்** |
|---|---|---|
| 1 | அண்ணா மத்திய பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளுக்கு மட்டும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (வருடம் 1க்கு) | 30.06.2020 |
| 2 | அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் (வருடம் 1க்கு) | 31.03.2020 |
| 3 | தேர்நிலை கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (வருடம் 1க்கு) | 31.03.2020 |
| 4 | அண்ணா மத்திய பேருந்து நிலையத்திற்குள் உள்ள பொருள்கள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் (பொருள் ஒன்றுக்கு நாள் 1க்கு ரூ.10/-) (வருடம் 1க்கு) | 31.05.2020 |

மேற்படி குத்தகை இனங்களுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்திடவும், அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 371/2020/அ6**

**2080)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து மனைப்பிரிவுகளிலும், மனையிடங்களிலும் தனியார் கட்டிடங்களிலும், விவசாய நிலத்திலும் அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ள அனைத்து மற்றும் உபயோகத்தில் இல்லாத ஆழ்துளை கிணறுகள், திறந்த வெளிக்கிணறுகளில் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழாத வகையில் உடனே பாதுகாப்பான முறையில் மூடிவைக்க அறிவிக்கப்படுகிறது. தவறினால் ஆழ்துளைக் கிணறுகள், திறந்தவெளிக்கிணறுகள் அமைத்தல் மற்றும் பாதுகாப்பு குறித்து தமிழ்நாடு நகராட்சிகளின் விதிகள் 2015ன்படி நில உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

மேலும் இனவரும் காலங்களில் நகராட்சி எல்லைக்குள் ஆழ்துளை கிணறுகள், திறந்தவெளி கிணறுகள் அமைக்க வேண்டும் எனில் நகராட்சிக்கு விண்ணப்பித்து உரிய அனுமதி நகராட்சியில் பெறப்பட வேண்டும் என்பதை தினசரி நாளிதழில் செய்தி 04.11.2019ல் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.5747/2019/ஜி1**

**2081)** நகராட்சி வார்டு எண்.14, உடுமலை ரோடு கதவு எண்கள் 31 முதல் 34 மற்றும் 34/1க்குரிய வரிவிதிப்பு எண்கள் முறையே 076/014/15863, 076/014/15864 மற்றும் 076/014/00596க்குரிய சொத்துவரி விதிப்புகள் டாக்டர்.முனுசாமி வீதிக்கும், உடுமலை ரோட்டிற்கும் சேர்ந்து வருவதால் சரியாக அளவீடு செய்யக் கோரி மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் திரு.சக்திவேல் மற்றும் தமிழ்செல்வி சென்னை, உயர்நீதிமன்றத்தில் நகராட்சிக்கு எதிராக WP No.35560/2019 என்ற எண்ணில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் வழக்காட சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.க.ஆனந்த் அவர்களை கேட்டுக் கொள்ளவும், அதற்காகும் அனைத்து செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 00305/2020/அ1**

**2082)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் சுப்பிரமணிய சுவாமி கோயில் எதிர்புறம் மற்றும் சி.டி.சி டிப்போ மேட்டுச் சாலை, கோவை தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் சிறு உயர் கோபுர மின் விளக்குகள் இரண்டு (Mini High Mast) அமைத்தல் பணிக்கு ரூ.5.75 **இலட்சம்** மதிப்பீட்டிற்கு 14.01.2020 ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| **1.** | M/s.RVG Metal Industries, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.27% குறைவு. |
| **2.** | M/s. S S Engineers, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.67% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.27% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.RVG Metal Industries, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.27% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.RVG Metal Industries, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. 0057/2020/இ1

**2083)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசு மற்றுட்ம கொசுப்புழு ஒழிப்பு பணிகளுக்கான பணியாளர்களை (Domestic Breeding Checkers) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பொருட்டு கடந்த 22.01.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் Offline முறையில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தங்கள் பெறப்பட்டன. Online ல் எவ்வித ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படவில்லை.

**பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்:**

1. Green Dream,<br>59. K.P.G.P.Nagar<br>T.Kottampatty, Pollachi.
2. Gideon International Forces,<br>No.4, Venkannan Street<br>New scheme Road, Pollachi.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறைகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதியற்றதாக உள்ளது என தெரிய வருகிறது. எனவே மேற்படி 22.01.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரித்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு ஒப்பந்தப்புள்ளி பெற கால அளவு ஒரு மாதத்திற்கு மேல் தேவைப்படுவதால், மறு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்து பணியினை வழங்கும் வரை நகரில் கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை தடுக்கவும் மருந்து தெளித்தல் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ளவும் தொடர்ந்து DBC பணியாளர்களின் பணி அத்தியாவசியமாக தேவைப்படுவதால் பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி தற்போது DCB பணிகள் மேற்கொண்டு வரும் திருவாளர்கள்.சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் அவர்களின் ஒப்பந்தக் காலத்தினை 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி தற்போது DBC பணிகள் மேற்கொண்டு வரும் திருவாளர்கள்.சதர்ன சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் அவர்களுக்கு பணிக்கால நீட்டிட்பபு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.6058/2019/எச்3**

**2084)** பொள்ளாச்சி நகராட்சியின் 36வது வார்டு பொட்டுமேடு பகுதியின் உட்புறத்தில் கிணற்றுநீர் விநியோகத்திற்கான குழாய்கள் இன்றி உள்ளது. இப்பகுதி பொது மக்கள் குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு கிணற்றுநீர் விநியோகமின்றி சிரமப்பட்டுகின்றனர். எனவே இப்பகுதி 120மீ நீளத்திற்கு கிணற்று நீர் விநியோக குழாய் அமைக்கவும், இதற்கான மதிப்பீடு ரூ.40,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கிணற்றுநீர் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0474/2020/இ1**

**2085)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23, பழனியப்பா லே அவுட், மூன்றாம் மற்றும் நான்காம் வீதி, பெரியார் காலனி மேற்கு, ஆலமரத்து அம்மன் கோவில் வீதி குறுக்கு வீதி மற்றும் ஷெரிப் காலனி ஆகிய வீதிகளில் கிணற்று குடிநீர்க் குழாய் மற்றும் குடிதண்ணீர் குழாய் இல்லாமல் உள்ளது. இப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் தங்களது தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய மெயின் ரோடு பகுதிகளிலுள்ள பொதுக் குழாயிகளிலிருந்து தண்ணீர் பிடித்து பூர்த்தி செய்கின்றனர்.

இப்பகுதி மக்கள், அப்பகுதி மக்கள் பயன்படுத்தும் குடிநீர்க் குழாயிலிருந்து தண்ணீர் பிடிப்பதால் பிரச்சினைகள் ஏற்படுகிறது. இப்பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு மேற்காணும் வீதிகளில் கிணற்று மற்றும் நல்ல தண்ணீர் குழாய்கள் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது.

எனவே, மேற்காணும் பணியை மேற்கொள்ள ரூ.1.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் மதிப்பீட்டினை குடிநீர் நிதியால் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2086)** நகராட்சி எல்லைக்குட்பட்ட K.R.G வீதி திருமூலர் வீதி, அழகாபுரி வீதி ஆகிய வீதிகளிலுள்ள பொதுமக்கள் தங்கள் குடிநீர் குழாய் இணைப்புகள் மேற்காணும் வீதிகளை இணைக்கும் மெயின் வீதிகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு எடுக்கப்பட்ட இணைப்புகளின் நீளம் அதிகமாக உள்ளதால், பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செல்வதில்லை. அடிக்கடி குழாய்கள் உடைப்பு ஏற்படுவதால், மெயின் வீதியை அடிக்கடி தோண்ட வேண்டியுள்ளது. இதனைத் தவிர்க்கம் பொருட்டு, இவ்வீதிகளுக்கு குடிநீர்க் குழாய் புதியதாக அமைக்க வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| | மேலும் சாம்பமூர்த்தி நகர், பாலக்காடு ரோடு N.G.M கல்லூரி, ஆகிய இடங்களில் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆனதால், குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டு, குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. இதனால் பழுதடைந்த குடிநீர் குழாய்களை அகற்றிவிட்டு, புதியதாக குடிநீர்க் குழாய் அமைக்க வேண்டியுள்ளது.<br>எனவே மேற்காணும் வீதிகளில் புதியதாக குடிநீர்க் குழாய் அமைக்க ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பீட்டினை குடிநீர் நிதியால் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2087)** | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19–ல் S.S. கோவில் வீதி மற்றும் ஜெய்னுலாபுதீன் வீதி சந்திப்பு, S.S. கோவில் வீதி மற்றும் ஆரோக்கிய நாதர் வீதி சந்திப்பு ஆகிய இரண்டு இடங்களில் பொதுமக்கள் மற்றும் பாதசாரிகள் பயன்பாட்டிற்கான சிறுபாலங்கள் அமைக்கப்பட்டது. சிறுபாலங்கள் அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆனதால் உடைந்து, பழுதடைந்த நிலையிலுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் பாலத்தினைக் கடக்க முடியாமல் அவதிக்குள்ளாகிறார்கள். மேலும் கழிவு நீர் தேங்குவதால் அருகில் வசிக்கும் பொதுமக்களும் அவதிக்குள்ளாகிறார்கள்.<br>எனவே பொதுமக்கள் நலன்கருதி, மேற்காணும் பழுதடைந்த சிறுபாலங்களை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைக்க ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பீட்டினை பொது நிதியால் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2088)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 அம்பேத்கார் வீதியில் மதுரை வீரன் கோவில் வடக்கே நகராட்சிக்குச் சொந்தமான பொதுக்கழிப்பிடம் உள்ளது. இக்கழிப்பிடம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதால், கழிப்பிடத்தின் மேற்கூரை உடைந்தும், கதவுகள் மற்றும் தளங்கள் சிதலமடைந்து, பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் பயன்படுத்தும் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.<br>பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, பழுதடைந்த கழிப்பிடத்தில் மராமத்துப் பணி மேற்கொண்டு, புதுப்பிக்க வேண்டியுள்ளது.<br>எனவே மேற்காணும் கழிப்பிடத்தில் மராமத்துப் பணி மேற்கொண்டு, புதுப்பிக்க ரூ.2.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பீட்டினை பொது நிதியால் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2089)** | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20 லிங்கையன் வீதியை மார்க்கெட் ரோட்டில் இணைப்பதற்கு நகராட்சி மூலமாக கருங்கல் மூடுபாலம் அமைக்கப்பட்டது. இப்பாலம் அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆனதால் மேற்பரப்பில் அமைக்கப்பட்ட போக்குவரத்தின் காரணமாக உடைந்த நிலையிலுள்ளது. இதனால் வெளியேறும் கழிவு நீர் செல்ல முடியாமல் தேங்கி விடுகிறது. இதனால் தொற்று வியாதிகளால் பொதுமக்கள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிறது.<br>எனவே பொதுமக்கள் நலன் கருதி, பழுதடைந்த கருங்கல் பாலத்தினை அகற்றி விட்டு புதியதாக சிறுபாலம் அமைக்க வேண்டியுள்ளது. சிறுபாலம் அமைக்க ரூ.3.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பீட்டினை பொது நிதியால் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |

| | |
|---|---|
| 2090) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 பழனியம்மாள் லே அவுட் இரண்டாம் சாலையில் இருபுறமும் வடிகால் பல வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது. இவ்வடிகால் கட்டப்பட்டு, பல வருடங்கள் ஆனதால், ஆங்காங்கே உடைந்தும் பெயர்த்த நிலையில் உள்ளது. உடைந்த பொருட்கள் வடிகாலில் விழுவதால் வடிகாலில் வழிந்தோடும் கழிவு நீர் ஆங்காங்கே தேங்குவதால் வசிக்கும் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.<br>பொதுமக்கள் நலன்கருதி மேற்காணும் பழுதடைந்த வடிகாலினை அகற்றிவிட்டு புதியதாக வடிகால் கட்டுவதற்கு ரூ.6.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பீட்டினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2091) | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24 கண்ணப்பன் நகர் வழியாக மரப்பேட்டை பள்ளம் செல்கிறது. இப்பள்ளத்தின் வழியாகதான், நகரில் பெய்யும் மழைநீர் செல்கிறது. கண்ணப்பன் நகரில் இப்பள்ளத்தின் இருபுறமும் வசிக்கும் பொதுமக்களின் வீடுகளுக்கு அதிகப்படியான நீர் உள்ளே புகா வண்ணம், தடுப்புச்சுவர் கட்டப்பட்டுள்ளது. இத்தடுப்புச் சுவர் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதால் கண்ணப்பன் நகரில் இடத்தில் ஒரு பகுதி இடிந்து விழுந்துவிட்டது. இதனால் பள்ளத்தில் வழிந்தோடும், மழைநீர் வீடுகளுக்குள் உள்ளே புகும் வாய்ப்புள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.<br>எனவே, பொது மக்கள் நலன் கருதி, தடுப்புச் சுவர் இடிந்த இடத்தில் புதியதாக தடுப்புச் சுவர் கட்ட வேண்டியுள்ளது. புதியாகத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு ரூ.2.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பீட்டினை பொது நிதியால் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2092) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான நல்லூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் எடைமேடை இயந்திரம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. எடைமேடை இயந்திரத்தில் Bio Mining குப்பைகள், உரங்கள் ஆகியவற்றின் அளவீடுகள் தினசரி அளவீடு செய்யப்பட்டு வருகிறது. எடைமேடை இயந்திரத்தை தொடர்ந்து பராமரிக்க வேண்டியுள்ளதால், ஆண்டுப் பராமரிப்பு மேற்கொள்ள ஓராண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.60,000/– ஆகும். இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுத்ததையும் அனுமதிக்கலாம். |
| 2093) | நகராட்சி வார்டு எண்.35–ல் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள சிமெண்ட் கான்கீரிட் சிறுபாலங்கள் பாதாள சாக்கடைப் பணிக்காக வெட்டப்பட்டும் பொழுது மிகவும் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால் மேற்படி சிறுபாலங்களை புதுப்பித்து அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணியை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |